## பேரிடரில் சிக்கியிருக்கும்

# தமிழ்நாட்டை மீட்க வேண்டியது நம் அனைவரின் பொறுப்பு!

## தஞ்சை திருமண விழாவில் – சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!





*தஞ்சாவூர்,ஜூன்.29-*

**தமிழ்நாடு தற்போது பேரிடரில் மாட்டிக் கொண்டிருக்கிறது. அந்தப் பேரிடரில் இருந்து தமிழ்நாட்டை மீட்க வேண்டியது நம் அனைவரின் பொறுப்பு என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருமண விழாவொன்றில் வாழ்த்துக்களை வழங்கும் நிகழ்ச்சியில் தெரிவித்தார்.**

**தஞ்சை மத்திய மாவட்டக் கழக அயலக அணி நிர்வாகி முத்தமிழ்ச்செல்வன் இல்ல திருமண விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

தஞ்சை மத்திய மாவட்டக் கழக அயலக அணியின் தலைவர் அண்ணன் முத்தமிழ்ச்செல்வன் திலகவதி ஆகியோரின் அன்பு மகன் தம்பி மலரவன், மறைந்த டி.எஸ்.கிருஷ்ணன் அமுதா ஆகியோரின் அன்பு மகள் சகோதரி காவியா திருமணத்தை உங்களுடைய முன்னிலையில் நடத்திவைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தத் திருமணத்தைப் பொறுத்தவரை கழகக் குடும்பங்களுக்கே உரிய வகையில்

ஒரு சிறப்பான சுயமரியாதைத் திருமணமாக இங்கே நடந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இது வெறும் திருமண விழாவா அல்லது கழக நிகழ்ச்சியா என்று கேட்கின்ற அளவுக்கு ஒரத்தநாடு முழுக்க இன்றைக்கு, கருப்புசிவப்புக் கொடி எல்லா இடங்களிலும் பறந்து கொண்டிருக்கிறது. அண்ணன் முத்தமிழ்ச்செல்வனைப் பொறுத்தவரை கழகத்தின் மீதும் தலைவர் அவர்கள் மீதும், கலைஞர் அவர்கள் மீதும் என் மீதும் மிகுந்த பாசம் கொண்டவர் அண்ணன் முத்தமிழ்ச்செல்வன் அவர்கள்.

அவருடைய திருமணத்தை மறைந்த முன்னாள் அமைச்சர் ஐயா கோ.சி.மணி அவர்கள் தான் நடத்திவைத்தார். அண்ணனுடைய மூத்த மகனுக்கு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் ‘கதிரவன்’ என்று பெயர் சூட்டியிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், இந்தத் திருமண மண்டபம் கூட அண்ணனுடையது என்று சொன்னார்கள். இந்தப் பகுதியில் நடக்கக்கூடிய அனைத்து கழக நிகழ்ச்சிகளும் இந்தத் திருமண மண்டபத்தில்தான். அண்ணன் முத்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய உதவியால்,

இங்கே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட கழகக் குடும்பத்தின் திருமணத்தை நடத்திவைப்பதில் மிகுந்த பெருமையடைகிறேன்.

### நிறைய வழக்கறிஞர்கள் தேவை.

மணமக்கள் இருவரும் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். இதில் மிகுந்த மகிழ்ச்சி என்னவென்றால், இன்றைக்குக் கழகத்திற்கு இந்த நேரத்தில் நிறைய வழக்கறிஞர்கள் தேவைப்படுகிறார்கள். ஏனென்றால் உங்களுக்குத் தெரியும், இன்றைக்கு அமைந்திருக்கக்கூடிய இந்த சோஃபா மாடல் ஆட்சியினுடைய போலி பிம்பம், கடந்த ஒரு மாதத்தில் அடித்துத் துவைக்கப்பட்டு, நொறுங்கிக் கிடக்கிறது. ஒவ்வொரு நாளும் இந்த ஆட்சியினுடைய அவலங்களை எல்லாம் மக்கள் புரிந்துகொண்டு வருகிறார்கள்.

இன்றைக்கு இந்த அரசுடைய தவறுகளை, சறுக்கல்களை எல்லாம் இளைஞர்கள் தட்டிக் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் அப்படித் தட்டிக்கேட்கிற இளைஞர்களை, நம்முடைய கழகத்தினரை, கைதுசெய்கிற வேலையை இன்றைக்கு இந்த அரசு, சோஃபா மாடல் அரசு ஆரம்பித்து இருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற அடக்குமுறைகளை எதிர்கொள்ள நிச்சயம் நமக்கு நிறைய வழக்கறிஞர்கள் தேவை. அந்த வகையில் இந்த மேடையிலேயே நமக்கு இரண்டு வழக்கறிஞர்கள், அதுவும் ஜோடியான வழக்கறிஞர்கள் நம் இயக்கத்திற்கு கிடைத்திருக்கிறார்கள்.

### எங்கு பார்த்தாலும் மின்வெட்டு!

தூய சக்தி, தூய சக்தி என்று சொன்னவர்கள் ஆட்சிக்கு வந்ததும் என்ன செய்தார்கள் என்று நீங்க அத்தனை பேரும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். ஆட்சிக்கு வந்த ஐந்தாவது நிமிடமே குதிரை பேரத்தை ஆரம்பித்தார்கள்; பிற கட்சிகளுக்கு முதலில் சோஃபா போகும், சோஃபாவுக்கு பின்னாலேயே நம்முடைய முதலமைச்சர் சோஃபாவைத் துரத்திக்கொண்டே போவார். பிறகு, முதலமைச்சர் பின்னாலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ராஜினாமா கடிதத்தோடு அவர்களும் வரிசையில் வருவதையெல்லாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

இன்றைக்கு இந்த காட்சிதான் தமிழ்நாட்டில் ஒரு மாதமாக ரிப்பீட் மோடில் தினமும் இது ஒரு செய்தியாக வந்துகொண்டு இருக்கிறது. அதுமட்டும் இல்லை, இன்றைக்கு தமிழ்நாட்டில் எங்கெங்கு பார்த்தாலும் மின்வெட்டு. எனக்கு என்ன ஆச்சரியம் என்றால், இந்த நேரம் வரைக்கும் இந்த மண்டபத்தில் மின்வெட்டு ஆகாமல் இருக்கிறது. ஜெனரேட்டரில் ஓடிக்கொண்டு இருக்கிறது என்று நினைக்கிறேன். அதுவும் குறிப்பாக இந்த ஒரத்தநாடு பகுதியில் பல கிராமங்களில், நள்ளிரவுகளில் மின்வெட்டு ஆகிக்கொண்டு இருக்கிறது. அது தொடர்கதையாக இருக்கிறது. விவசாயிகள் இன்றைக்கு இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### பயிர்க்கடன் தள்ளுபடி மோசடி!

இன்னொரு செய்தி. நம்முடைய தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, 2021ஆம் ஆண்டிலிருந்து 2025ஆம் ஆண்டு வரைக்கும் சரியாக ஜூன் 12ஆம் தேதி அன்று மேட்டூரில் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்காகத் தண்ணீரை திறந்து வைத்தார். ஆனால் இந்த அரசு, இந்த ஆண்டு இன்னும் மேட்டூர் அணையைத் திறக்கவில்லை. அதுமட்டும் இல்லை, குறுவை சாகுபடிக்கு அவர்கள் அறிவித்த ‘ஸ்பெஷல் பேக்கேஜ் பத்தாது (சிறப்புத்தொகுப்பு) என்று இன்றைக்கு விவசாயிகள் அத்தனை பேரும் சாலைகளுக்கு வந்து போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.

இதை சட்டமன்றத்தில் சொன்ன உடனே முதலமைச்சர் என்ன சொன்னார், ‘திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தூண்டுதலினால் விவசாயிகள் போராட்டத்திற்கு வந்திருக்கிறார்கள்’, என்று. விவசாயிகளுடைய போராட்டத்தையும் கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறார் இங்கே இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

தேர்தலின்போது, ‘5 ஏக்கர் வரைக்கும் பயிர்க்கடன் தள்ளுபடி’, என்று முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் வாக்குறுதிகளைக் கொடுத்தார். ஆனால் அதெல்லாம் செய்தாரா? என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். முதலில் ஒரு லட்சம் வரைக்கும் பயிர்க்கடன் வாங்கியிருந்தால் வெறும் 5,000 ரூபாய் தள்ளுபடி என்று அறிவித்தார்கள். அதிலும் பார்த்தீர்கள் என்றால் சிறு விவசாயி, குறு விவசாயி என்று தரம் பிரித்தார்கள். அதன் பிறகு 75,000 வரைக்கும் தள்ளுபடி என்று சொன்னார்கள். அதிலும் இப்போது ஒரே வீட்டில் இரண்டு பேர், மூன்று பேர் கடன் வாங்கியிருந்தாலோ, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பென்ஷன் வாங்குபவர்கள் இருந்தாலோ அவர்களுக்கெல்லாம் பயிர்க்கடன் தள்ளுபடி இல்லை என்பதையும் அறிவித்திருக்கிறார்கள்.

### சட்டம் ஒழுங்கு சீர்குலைவு

இது எல்லாவற்றையும் விட மிகப்பெரிய ஒரு கொடுமை சட்ட ஒழுங்கு சீர்குலைவு. இன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய சட்ட ஒழுங்கு எந்த அளவில் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும், ஒரு அதலபாதாளத்தில், படுகுழியில் இன்றைக்கு இந்த ஆட்சியாளர்கள் தள்ளி இருக்கிறார்கள். இதையெல்லாம் கழகம் சார்பாகச் சட்டமன்றத்தில் நாங்கள் எல்லாம் பேசினோம். ஆனால் அதற்கெல்லாம் முதலமைச்சர், பதில் சொன்னாரா என்று பார்த்தீர்கள் என்றால் ஒரு பதிலும் கிடையாது. ஆளுங்கட்சியினர் சட்டசபையில் என்னென்ன கூத்தடித்தார்கள் என்று நீங்கள் அத்தனை பேரும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள்.

எங்களுக்கெல்லாம் ஒரு சந்தேகம், இது சட்டமன்றமா, இல்லை சினிமா தியேட்டரா, இல்லை ஏதாவது ஒரு சூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்துவிட்டோமா என்று கேட்கிற அளவுக்கு இன்றைக்குச் சட்டமன்றத்தின் தரத்தையே ஆளுங்கட்சியினர் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எதற்கெடுத்தாலும் ‘தி.மு.க. தான் காரணம்’, என்கின்ற ரெடிமேட் பதிலை இன்றைய ஆட்சியாளர்கள் வைத்திருக்கிறார்கள். நம்முடைய தலைவர் செய்த பணிகளால் நல்லது நடந்தால் அதற்கும் சேர்ந்து இந்த ஆட்சியாளர்கள் இன்றைக்கு ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அதுவே ஏதாவது பிரச்சினை என்றால், ‘தி.மு.க. தான் காரணம்’, என்கின்ற ரெடிமேட் பதிலையும் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

### எங்கும் நிறைந்திருக்கிறார் தலைவர்

அதுமட்டும் இல்லை, நம்முடைய தலைவரைச் சிறுமைப்படுத்தும் நோக்கத்தோடு, நம் தலைவரை முதலமைச்சர் தேடிக்கொண்டிருக்கிறார் என்றும் சட்டமன்றத்தில் பேசினார். நம் தலைவர் என்றைக்கும் தேடிக் கண்டுபிடிக்கிற இடத்தில் இருந்ததே கிடையாது. மிசா காலத்தில் தலைவரைத் தேடி போலீஸ் கோபாலபுரம் இல்லத்திற்கு அவரைக் கைது செய்வதற்கு அன்று வந்தார்கள். அப்போது கலைஞர் அவர்கள் சொன்ன பதில், ‘என்னுடைய மகன் கழக நிகழ்ச்சிக்காக வெளியூர் போயிருக்கிறார், வந்ததும் நானே உங்களிடம் அனுப்பி வைக்கிறேன்’, என்று சொன்னவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். கலைஞர் சொன்னபடி கழகப்பணி முடிந்து வந்த நம்முடைய தலைவரை உடனடியாகக் காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்தார்.

இன்றைக்கு மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் திட்டங்கள் மூலமாக இன்றைக்கு நம்முடைய தலைவர் தமிழ்நாடு முழுக்க இருக்கிறார், எங்கும் நிறைந்திருக்கிறார். தினமும் மக்களோடு மக்களாக இருக்கக்கூடியவர் நம்முடைய தலைவர் அவர்கள். மக்களுடைய இதயங்களில் இருக்கக்கூடியவர் நம்முடைய தலைவர் அவர்கள். ஆனால், அதே நேரத்தில், முதலமைச்சரின் பெரம்பூர் தொகுதி மக்கள் என்ன தெரியுமா சொல்கிறார்கள்? ‘நாங்கள் எல்லாம் தெரியாமல் ஒருவரை வெற்றி பெறச் செய்துவிட்டோம். அவர் எங்கே போனார்? யாராவது பார்த்தீர்களா?’ என்று கேட்கிற அளவுக்கு இன்றைக்கு பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் புலம்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

### பேரிடரில் தமிழ்நாடு

இந்த ஆட்சியில் ஒட்டுமொத்த தமிழ்நாடும் யாரைத் தேடிக்கொண்டு இருக்கிறது? மின்சாரத்தைத் தேடிக்கொண்டு இருக்கிறது. கடந்த ஐந்து வருடம் நன்றாக இருந்த சட்டம்ஒழுங்கை இன்றைக்கு மக்கள் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, கிண்டல் செய்வதாக நினைத்து முதலமைச்சர் அவரை அவரே இன்றைக்கு எக்ஸ்போஸ் செய்ய ஆரம்பித்திருக்கிறார். இன்னும் அவர் சட்டமன்றத்தில் நடனம் மட்டும்தான் ஆடவில்லை. அடுத்த கூட்டத்தொடரில் நிச்சயம் ஒரு நடனப் பெர்ஃபார்மன்ஸூம் இருக்கும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பு.

ஆகவே, இன்றைக்கு தமிழ்நாடு இவ்வளவு பெரிய ஒரு பேரிடரில் மாட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த பேரிடரிலிருந்து தமிழ்நாட்டை மீட்க வேண்டியது நம்முடைய பொறுப்பு, உடன்பிறப்புகளாகிய நம்முடைய பொறுப்பு. அதற்காக நாம் அனைவரும் வருங்காலத்தில் ஒற்றுமையோடு உழைக்க வேண்டும். நாம் பார்க்காத வெற்றியும் கிடையாது, நாம் பார்க்காத தோல்வியும் கிடையாது. கட்சியையும் தலைவரையும் மனதில் வைத்து நம்முடைய பணிகளையெல்லாம் நாம் வகுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில், மணமக்களுக்கு அனைவரின் சார்பாக ஒரு வேண்டுகோள். நீங்கள் ஒற்றுமையோடு இருக்க வேண்டும். விட்டுக் கொடுக்கக்கூடிய விஷயங்களுக்கு விட்டுக் கொடுத்து, அதே நேரத்தில் சுயமரியாதையை எந்த நேரத்திலும் விட்டுக்கொடுக்காமல் உங்களுடைய வாழ்க்கையை நீங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைக்கு அழகிய ஒரு தமிழ்ப் பெயரை நீங்கள் சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, மணமக்களுக்கு உங்கள் அனைவரின் சார்பாக மீண்டும் என் வாழ்த்துகளைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### கலந்துகொண்டவர்கள்!

மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான துரைச்சந்திரசேகரன், முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி செழியன், பழனி மாணிக்கம், வைத்திலிங்கம், மாவட்ட கழகப் பொறுப்பாளர் பழனிவேல், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராமச்சந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், ரங்கசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வம், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், துணை மேயர் மருத்துவர் அஞ்சுகம் பூபதி, திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர்கள் குணசேகரன், ஜெயக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் அருளானந்தசாமி, செல்வராஜ், முருகையன், ரமேஷ்குமார், கார்த்திகேயன், பேரூர் கழகச் செயலாளர்கள் கிருஷ்ணகுமார், திராவிட கதிரவன், துரை ஜெயக்குமார் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில் வேந்தன், துணை அமைப்பாளர்கள் செந்தமிழ்ச் செல்வன், கார்த்தி, சுரேஷ்குமார், ஹரிதரன், ராஜேஷ்கண்ணா, வெங்கடேசன், உதயநிதி, மாநகர அமைப்பாளர் வாசிம் ராஜா, துணை அமைப்பாளர் மதிபாலன், ஒன்றிய அமைப்பாளர்கள் இளந்தமிழன், அப்பாத்துரை மற்றும் பல கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

---

## திருவல்லிக்கேணி 120வது வட்ட பகுதிப் பிரதிநிதி

# எல்.பி.எப்.அமுல்ராஜ் இல்ல மணவிழா வரவேற்பு!

### கழக முன்னணியினர் வாழ்த்து!



*சென்னை, ஜூன் 29-*

திருவல்லிக்கேணி பகுதி 120வது வட்டம், பகுதி பிரதிநிதி எல்.பி.எப். அமுல் ராஜ்-யு.ஜமுனா ஆகியோரின் புதல்வி யு.கே. கீர்த்தனாவுக்கும், ஜி.ஜோசப் - ஜெ.ரஞ்சிதம் ஆகியோரின் புதல்வர் ஜெ.கில்பர்ட்க்கும் மணவிழா தூத்துக்குடி பணிமய மாதா ஆலயத்தில் கடந்த 25ஆம் தேதி அன்று நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு இன்று (29.06.2026-திங்கள் கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை, இராயப் பேட்டை, ஜானி ஜான்சன் ரோட்டில் உள்ள பிரசன்டேஷன் சர்ச் கம்யூனிட்டி ஹாலில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பில் மாவட்டக்கழக, பகுதிக் கழக வட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள் உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டு மணமக்கள் யு.கே. கீர்த்தனா- ஜெ.கில்பர்ட் ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

---

## சபரீசன் மீது அவதூறுக் கருத்துக்கள் வெளியிட்ட

# அமைச்சர்கள் ஆதவ் அர்ஜூனா - நிர்மல்குமார் மீது சட்ட நடவடிக்கை!

## சபரீசன் சார்பில் வழக்கறிஞர் நோட்டீஸ்!

சென்னை, ஜூன் 29 -

உண்மைக்கு புறம்பான கருத்துக்களை தெரிவித்த அமைச்சர்கள் ஆதவ் அர்ஜூனா, நிர்மல்குமார் ஆகியோர் மன்னிப்பு கேட்க வேண்டும் எனக் கோரி சபரீசன் சார்பில் வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

சபரீசன் சார்பில், தமிழ்நாடு பொதுப் பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா மற்றும் மின் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் ஆகியோருக்கு வழக்கறிஞர் ஏ.எஸ். அஸ்வின் பிரசன்னா நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அதில், பொது சேவை, உண்மையான, நேர்மையான, அர்ப்பணிப்புமிக்க செயல்பாடுகளின் மூலம் தனிப்பட்ட, சமூக, தொழில் ரீதியான வாழ்க்கை ஆகியவற்றில் களங்கமற்ற நற்பெயரை கொண்டுள்ள சபரீசனுக்கு எதிராக, அமைச்சர்கள் ஆதவ் அர்ஜூனா மற்றும் நிர்மல்குமார் ஆகியோர் ஜூன் 25ஆம் தேதி நடந்த ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துகள் தொலைக்காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களில் பரவி, அவரது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சபரீசன் குறித்து இரு அமைச்சர்களும் ஊடகங்களில் தெரிவித்த கருத்துகளை உடனடியாக திரும்பப்பெற வேண்டும்; அதே ஊடகங்கள் முன்பாக சபரீசனிடம் இரு அமைச்சர்களும் மன்னிப்பு கேட்க வேண்டும்; சம்பந்தப்பட்ட வீடியோ பதிவுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; எதிர்காலத்தில் சபரீசனுக்கு எதிராக அவதூறான, இழிவான, உள்நோக்கத்துடன் கூடிய கருத்துகளை வெளியிட மாட்டோம் என நிபந்தனையற்ற உறுதிமொழியை எழுத்துப்பூர்வமாக வழங்க வேண்டும் எனவும் அந்த நோட்டீசில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவற்றை 15 நாட்களுக்குள் செய்யத் தவறினால், சட்டப்படி குற்றமாக கருதப்படும் இந்த அவதூறு கருத்துக்கள் குறித்து, சட்டரீதியான நடவடிக்கையை இரு அமைச்சர்களும் சந்திக்க நேரிடும் எனவும் சபரீசன் சார்பில் அனுப்பப்பட்டுள்ள வக்கீல் நோட்டீசில் எச்சரிக்கப்பட்டுள்ளது.